வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

நாள்: 02.07.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, 3ஆவது பதவி காலத்தில், மும்மடங்கு வேகத்தில் செயல்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று மக்களவையில், குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்களுக்கு பதில் அளித்த பிரதமர், நாளை மாநிலங்களவையில் பதில் அளிக்கிறார்.

நேற்று மக்களவையில் எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி வெளியிட்ட சில கருத்துக்களை ஆட்சேபித்து, பிஜேபி எம்பி ஒருவர் இன்று அவையில் நோட்டீஸ் கொடுத்துள்ளார்.

பிரெஞ்ச்-இந்திய விடுதலை போராட்ட வீரர் தியாகி அன்சாரி துரைசாமி பிறந்த நாளான இன்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. சிபி ராதாகிருஷ்ணன், அன்னாருக்கு மரியாதை செலுத்தி உள்ளார்.

------------------------------

மோடி-மக்களவை 1 (18)

மத்திய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு 3ஆம் முறையாக பதவிக்கு வந்தது, பெருமைக்குரியது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். நாடாளுமன்ற இரு அவைகளின் கலப்புக் கூட்டத்தில்,

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது, மக்களவையில் இடம்பெற்ற விவாதங்களுக்கு இன்று, பதிலளித்து பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். 3ஆவது பதவி காலத்தில், அரசு மும்மடங்கு வேகத்தில் செயல்படும் என்று அவர் தெரிவித்தார். 2014ஆம் ஆண்டிற்கு முன்னர், ஊழல் மற்றும் முறைகேடுகளால், நாட்டு மக்கள் தன்னம்பிக்கை இழந்து விரக்தியில் இருந்த நிலை தற்போது இல்லை என்றும், தமது அரசின் கொள்கையிலும், நிர்வாகத்திலும், நாட்டிற்கே முதலிடம் அளிக்கப் படுவதாகவும் பிரதமர் கூறினார். குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கு சலுகை காட்டும் வகையிலான நீண்டகால போக்கு தற்போது மாறிவிட்டதாகவும், அனைவருக்கும் ஆதரவு-அனைவருக்கும் வளர்ச்சி என்பதே தமது அரசின் கொள்கை என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்கள், நாடாளுமன்ற இரு அவைகளிலும், இன்றும் தொடர்ந்து நடைபெற்றன. மக்களவையில் சமாஜ்வாடி கட்சியின்



தலைவர் திரு. அகிலேஷ் யாதவ், விவாதங்களில் பங்கேற்று பேசுகையில், உலகின் 5ஆவது பெரிய பொருளாதாரமாக இந்தியா மேம்பட்டுள்ள போதிலும், தனிநபர் வருமானம் குறைவாகவே இருப்பதாக கூறினார். மத்திய அரசு, மத்திய புலனாய்வு அமைப்புகளை எதிர்கட்சித்

தலைவர்களுக்கு எதிராக பயன்படுத்துவதாக திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் திரு. கல்யாண் பேனர்ஜி குற்றம்சாட்டினார். உள்கட்டமைப்புத் துறையில் அரசு பல்வேறு முன்னேற்றங்களை கொண்டு வந்திருப்பதாக, பிஜேபி உறுப்பினர் திரு. சந்தோஷ் பாண்டே தெரிவித்தார். மேற்குவங்கத்தில் பிஜேபி தொண்டர்கள் தாக்கப் படுவதாக, மற்றொரு பிஜேபி உறுப்பினர் திரு. சவுமித்ராகான் குற்றம்சாட்டினார்.

மாநிலங்களவையில், அசாம் கனபரிஷத் உறுப்பினர் திரு. பீரேந்திர பிரசாத் பைஷ்யா, பிஜேபி உறுப்பினர் திரு. அசோக் ராவ் சவான், காங்கிரஸ் உறுப்பின் திரு. பிரமோத் திவாரி, ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் உறுப்பினர் திரு. வெங்கடசுப்பா ரெட்டி உள்ளிட்டோர் விவாதங்களில் பங்கேற்று பேசினர்.

முன்னதாக, கேரளத்தில் இருந்து, மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. ஜோஸ்.கே. மணி உள்ளிட்ட மூவர், அவையில், உறுப்பினர்களாக பதவி ஏற்றுக் கொண்டனர்.

------------------------------

மோடி – நாளை (5)

மாநிலங்களவையில், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்களுக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நாளை பதில் அளிக்கிறார். நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு இன்று புதுடெல்லியில், தேசிய ஜனநாயகக்

கூட்டணி எம்பிக்களின் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் இதை தெரிவித்தார்.

-----------------------------

*மோடி-கூட்டணி 1* (15)

தேசிய ஜனநாயக் கூட்டணி எம்பிக்கள், நாடாளுமன்றத்தில் விதிமுறைகளை பின்பற்றி நடக்க வேண்டும் என்றும், நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மாண்புகளை காக்கும் வகையில் செயல்பட வேண்டும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று, புதுடெல்லியில், தேசிய ஜனநாயகக் கூட்டணி எம்பிக்களின் கூட்டத்தில் பேசுகையில் அவர் இவ்வாறு வலியுறுத்தினார். நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாட்டிற்கும், மக்களுக்கும் சேவை புரிவதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் என்பதையும், கட்சி வேறுபாடின்றி மக்களுக்கு சேவை புரிவதே இவர்களின் முக்கிய பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார். நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, இக்கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதை தெரிவித்தார். சுற்றுச் சூழல், நீர்வளம் உட்பட மக்கள் பிரச்சனை அதிகம் உள்ள ஏதாவது ஒரு துறையில், எம்பிக்கள் தங்களின் நிபுணத்துவத்தை வளர்த்துக் கொள்ள பிரதமர் ஊக்கமூட்டியதாக அவர் கூறினார்.

மோடி கூட்டணி 2 (6)

இதுவரையிலான இந்திய பிரதமர்கள் குறித்து புதுடெல்லியில் அமைக்கப் பட்டுள்ள பிரதமர்கள் அருங்காட்சியத்தை, எம்பிக்கள் தங்களின் குடும்பத்தினரோடு சென்று பார்க்க வேண்டும் என்றும், பிரதமர் இன்றைய கூட்டத்தில் கேட்டுக் கொண்டார். முன்னதாக தேசிய ஜனநாயகக் கூட்டணி தலைவர்கள், 3ஆம் முறையாகப் பிரதமர் பதவி ஏற்றதற்காக, திரு. நரேந்திர மோடிக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

-----------------------------

லாலன் சிங் (8)

மக்களவையில் நேற்று, எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி வெளியிட்ட கருத்துக்களை மத்திய அமைச்சரும், மூத்த ஜேடியு தலைவருமான திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் என்கிற லாலன் சிங் ஆட்சேபித்துள்ளார். திரு. ராகுல்காந்தியின் பேச்சில், உண்மையோ, சாரமோ இல்லை என்று, அவர் கூறியுள்ளார். முக்கிய பொறுப்பான எதிர்கட்சித் தலைவர் பதவியை திரு. ராகுல்காந்தி ஏற்றுள்ளாரே தவிர, அவரது பேச்சுக்கள் பொதுக் கூட்ட உரை போலவே அமைந்துள்ளதாக, அவர் தெரிவித்துள்ளார்.

-----------------------------

நோட்டீஸ் (10)

நேற்று மக்களவையில் எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி வெளியிட்ட சில கருத்துக்களை ஆட்சேபித்து, பிஜேபி எம்பி திருமதி

பான்சுரி ஸ்வராஜ், இன்று அவையில் நோட்டீஸ் கொடுத்துள்ளார். திரு. ராகுல்காந்தி வெளியிட்ட சில தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை மற்றும் தவறான கருத்துக்கு இட்டுச் செல்லும் நோக்கம் கொண்டவை என்பதால், இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார். இதற்கிடையே, தமது பேச்சின் சில பகுதிகள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டது குறித்து திரு. ராகுல்காந்தி, மக்களவைத் தலைவர் திரு. ஓம. பிர்லாவிற்கு கடிதம் எழுதியுள்ளார். நீக்கப்பட்ட பகுதிகளை மீண்டும் அவைக் குறிப்பில் சேர்க்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

-----------------------------

*துரைசாமி* (9)

பிரெஞ்ச்-இந்திய விடுதலை போராட்ட வீரர் தியாகி அன்சாரி துரைசாமி பிறந்த நாளான இன்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. சிபி ராதாகிருஷ்ணன், அன்னாருக்கு மரியாதை செலுத்தி உள்ளார். காந்திய சிந்தனையால் ஈர்க்கப்பட்டு, தேசிய விடுதலை இயக்கத்தில் இணைந்து, புதுச்சேரியை பிரெஞ்ச் ஆதிக்கத்தில் இருந்து விடுவிக்க பாடுபட்டவர் தியாகி அன்சாரி துரைசாமி என்றும், ஏழை, எளிய மக்களின் துன்பங்களை கண்டு வருந்தி, ஏற்றத் தாழ்வுகள் இல்லாத சமத்துவ சமுதாயம் படைக்கப் பாடுபட்ட அன்னாரின் பணிகளை வரலாறு மறவாது என்றும், துணை நிலை ஆளுநர் தமது செய்தியில் கூறியுள்ளார்.

-------------------------------

*துரைசாமி-விழா* (8)

புதுச்சேரியில், பிரெஞ்ச் இந்திய விடுதலை போராட்ட வீரர் தியாகி அன்சாரி துரைசாமியின் பிறந்த நாள் அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது. காந்தி வீதி-பட்டேல் சாலை சந்திப்பில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர் . செல்வம், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு, அரசுக் கொறடா திரு. ஏ.கே.டி அறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கேஎஸ்பி ரமேஷ், திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, திரு. லட்சுமிகாந்தன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

-------------------------------

*கல்வியியல் கல்லூரி* (10)

புதுச்சேரி கூட்டுறவு கல்வியியல் கல்லூரியில் 2 ஆண்டுகால பிஎட் பட்டப்படிப்பில் சேர, புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த பட்டப்படிப்பு முடித்த மாணவ-மாணவியர் வரும் 18ஆம் தேதிக்குள், நேரிலோ அல்லது தபால் மூலமோ விண்ணப்பிக்கலாம் என கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவங்களை, கல்லூரியின் இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. உள்ளூர் மாணவர் சேர்க்கை முடிந்த பின்னர், காலியாக உள்ள இடங்களுக்கு வெளி மாநில மாணவ-மாணவிகளின் விண்ணப்பங்கள், நிபந்தனைகளுக்கு உட்பட்டு பரிசீலிக்கப்படும் என்றும் கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

-------------------------------

தலைமை நீதிபதி (11)

நீதித் துறையின் அஸ்திவாரமே நீதி மற்றும் சமத்துவ கொள்கைதான் என்று, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சந்திர சூட் கூறியுள்ளார். டெல்லி கர்கர்டூமா பகுதியில், 3 நீதிமன்ற கட்டிடங்களை கட்டும் பணிகளுக்கு, இன்று நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழாவில் அவர் பேசுகையில், நீதிமன்றம் என்பது, மக்களின் எண்ணங்கள் மற்றும் நம்பிக்கைகளால் கட்டப்பட்டதே தவிர, வெறும் கல் கட்டிடம் அல்ல என்றார். சட்டப்படிதான் நிர்வாகம் நடக்கிறது என்னும் உணர்வை மக்களுக்கு வழங்குவதே நீதிமன்றங்களின் நோக்கம் என்றும், அவர் கூறினார். டெல்லி உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. மன்மோகன், டெல்லி உயர்நீதிமன்ற நீதிபதிகள், திரு. அமானுல்லா, டெல்லி துணை நிலை ஆளுநர் திரு. வி.கே சக்சேனா ஆகியோர் கலந்து கொண்டனர்.

-------------------------------

கிஷண் ரெட்டி (12)

மத்திய சுரங்கத் துறை அமைச்சர் திரு. கிஷண்ரெட்டி, இன்று இணையமைச்சர் திரு. சதீஷ் சந்திர தூபே-யுடன் இணைந்து, புதுடெல்லி சாஸ்திரி பவனில், மாவட்ட கனிமவள நிறுவனத்தின் காட்சிக் கூடத்தை திறந்து வைத்தார். பிரதமரின் கனிமவளப் பகுதி மக்கள் நலத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள், மற்றும், சுரங்கத் துறை நிறுவனங்களின் கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வு திட்ட ஆதரவுடன் கூடிய சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் இதில் காட்சிக்கு

வைக்கப் பட்டுள்ளன. சுரங்கப் பணிகளால் பாதிக்கப்படும் மக்களின் நலன்களை மேம்படுத்த, பிரதமர் திரு. நரேந்திர மோடி, சிறப்பு கவனம் செலுத்தி வருவதாகவும், இதற்கென இப்பகுதிகளில், ஏற்கனவே 18 ஆயிரம் திட்டங்கள் முடிக்கப்பட்டு, வரவிருக்கும் நாட்களில் வேறு பல திட்டங்களுக்கு உத்தேசிக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

--------------------------------

பருவ மழை (19)

தென்மேற்கு பருவ மழை நாடு முழுவதிலும் பரவி உள்ளது. ராஜஸ்தான், அரியானா மற்றும் பஞசாப்பில் எஞ்சியிருந்த பகுதிகளையும் இன்று பருவ மழை எட்டி இருப்பதாக, இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. இம்முறை வழக்கமான தேதிக்கு 6 நாள் முன்பாகவே பருவ மழை நாடு முழுவதிலும் பரவி இருப்பதாகவும், தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, குஜராத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முதல் இடைவிடாது மழை பெய்து வருகிறது. அசாமில் கனமழை காரணமாக, 19 மாவட்டங்களில் சுமார் 6 லட்சம் பேர், வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுள்ளனர். டின்சுகியா, திமாஜி உள்ளிட்ட மாவட்டங்களில் வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 36 ஆக அதிகரித்துள்ளது. அருணாச்சல பிரதேசத்திலும் மழையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டுள்ளது. இடாநகர் மற்றும் மாநிலத்தின் வேறு சில மாவட்டங்களில், பள்ளிகளுக்கு 5 நாள்

விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது. உத்ராகண்ட், மற்றும், பீகாரிலும் பல்வேறு பகுதிகளில், மழை பெய்து வருகிறது. வடமேற்கு, கிழக்கு மற்றும் வடகிழக்கு இந்தியாவில், பருவமழையின் தீவிரம், அடுத்த 4 முதல் 5 நாட்களுக்கு தொடரும் என்றும், குஜராத், பீகார், மற்றும் மேகாலயாவில் ஓரிரு இடங்களில் கனமழை முதல் மிக கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது.

-------------------------------

ஜெய்சங்கர் (18)

கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில், நாளை நடைபெற உள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் பங்கேற்கும் இந்தியக் குழுவிற்கு வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தலையேற்கிறார். ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகளின் அரசுத் தலைவர்களுக்கு இடையிலான இந்த 24ஆவது கூட்டத்தில், பலதரப்பு ஒத்துழைப்பின் நடப்பு நிலவரம் குறித்தும், இதை இன்னும் மேம்படுத்துவதற்கான வாய்ப்பு குறித்தும் விவாதிக்கப்படும். பொது அக்கறை உள்ள பிராந்தியம் மற்றும் சர்வதேச பிரச்சனைகளும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் என தகவல் வெளியாகி உள்ளது. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் செயல்பாடுகளுக்கான இந்தியாவின் முன்னுரிமைகள், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் SECURE கொள்கையை அடிப்படையாக கொண்டவை என்றும், பாதுகாப்பு,

பொருளாதார ஒத்துழைப்பு, போக்குவரத்து தொடர்புகள், ஒற்றுமை, இறையாண்மைக்கு மரியாதை ஆகியன இதில் அடங்கும் என்றும் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தியா கடந்த ஆண்டு, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் தலைமைப் பொறுப்பின் போது ஷாங்காய் ஒத்துழைப்பு நாடுகளின் 23ஆவது அரசுத் தலைவர்கள் கூட்டத்தை, ஜூலை 4ஆம் தேதி மெய்நிகர் முறையில் நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.

--------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, 3ஆவது பதவி காலத்தில், மும்மடங்கு வேகத்தில் செயல்படும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று மக்களவையில், குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதங்களுக்கு பதில் அளித்த பிரதமர், நாளை மாநிலங்களவையில் பதில் அளிக்கிறார்.

நேற்று மக்களவையில் எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி வெளியிட்ட சில கருத்துக்களை ஆட்சேபித்து, பிஜேபி எம்பி ஒருவர் இன்று அவையில் நோட்டீஸ் கொடுத்துள்ளார்.

பிரெஞ்ச்-இந்திய விடுதலை போராட்ட வீரர் தியாகி அன்சாரி துரைசாமி பிறந்த நாளான இன்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. சிபி ராதாகிருஷ்ணன், அன்னாருக்கு மரியாதை செலுத்தி உள்ளார்.